செய்தி வெளியீட்டு எண்–236 நாள்–15.3.2010

# செய்தி வெளியீடு

**மாண்புமிகு துணை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் இன்று (15.03.2010) தலைமைச் செயலகத்தில், மாநில திறனாய்வு மேம்பாட்டுக் குழுமத்தின் (**State Skill Development Mission**) முதற் கூட்டம் நடைபெற்றது.**

**இந்தியா, மக்கள் தொகைப் பெருக்கத்தில் பெரிய நாடாக இருந்த போதும், நம் நாட்டில் 20 வயது முதல் 29 வயதுடைய இளைஞர்களில்ல் 5 சதவிகிதம் பேர் மட்டுமே முறையான தொழிற்பயிற்சி பெற முடிகிறது. இது உலக நாடுகளுடன் ஒப்பிடுகையில் குறைவானதாகும். தொழில் வளர்ச்சியடைந்த நாடுகளில் இந்த விகிதம் சுமார் 60 முதல் 96 சதவிகிதம் என்ற அளவில் உள்ளது. இந்தியா பொருளாதார வளர்ச்சியிலும், சமுதாய முன்னேற்றத்திலும் முன்னோடி நாடாகத் திகழ வேண்டுமானால், தொழில் திறன் வாய்ந்த தொழிலாளர்கள் முக்கிமாக கருதப்படுகின்றனர். இதனைக் கருத்தில் கொண்டு புதிய தொழில் மேம்பாட்டுக் கொள்கை இந்திய அரசால் உருவாக்கப்பட்டுள்ளது. வரும் 2022ஆம் ஆண்டிற்குள் சுமார் 50 கோடி தொழிற்திறன் வாய்ந்தவர்களை உருவாக்கும் வகையில் தொழிற்பயிற்ச்சிகள் அமைந்திட வேண்டும் என்ற இலக்கு மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.**

**இக்கூட்டத்தில் துணை முதலமைச்சர் திருமு.க.ஸ்டாலின் அலுவலர்களுக்கு அறிவுறுத்தியதாவது : “பல தொழிற்பிரிவுகளில் பல்வேறு வகையான பயிற்சிகளையளித்து வரும் துறைகள், நிறுவனங்களை ஒருங்கிணைத்து அதன் மூலம் தொழிற்பயிற்சி பெறுவோரின் எண்ணிக்கையினையும், தொழிற்பயிற்சியின் தரத்தையும் உயர்த்தி, இளைஞர்களுக்குத் தேவைப்படும் தொழிற்பயிற்சிகளை அளித்து அதன்மூலம் உள்நாடு மற்றும் வெளிநாடு வேலைவாய்ப்புகளை இளைஞர்கள் பெற்றிடவும், அதன்மூலம் நாட்டின் பொருளாதார வளர்ச்சியினை உயர்த்திடவும், செயல்திட்டம் தீட்டி, செயல்படவும், மாநில திறன் மேம்பாட்டுக் குழுமம் அமைக்கப்பட்டுள்ளதென்றும், இக்குழு முனைப்பாக**

செயல்பட்டு தொழிற்பயிற்சி அளிக்கும் பொறுப்பினை மேற்கொண்டுள்ள துறைகளின் செயலாளர்களுடன் தொழிற்பயிற்சி அளிக்கும் திறனை மேம்படுத்துவது, மாநில அளவில் ஒருங்கிணைப்புக் குழு நியமித்தல், மாவட்ட அளவில் திறன் மேம்பாட்டுக் குழு அமைப்பது, பள்ளி, கல்லூரிகள், பல்தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் பொறியியல் கல்லூரிகளில் குறுகிய காலத் திறன் மேம்பாட்டுப் பயிற்சியினை அளித்தல் போன்ற பணிகளை சீரியமுறையில் மேற்கொள்ள வேண்டும்'' என்றும் கேட்டு கொண்டார்.

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் இக்குழுவின் துணைத் தலைவராகவும், தமிழக அரசின் தலைமைச் செயலர், உள்ளிட்ட உயர் அதிகாரிகள் மற்றும் அலுவல் சாரா உறுப்பினர்கள் ஆகியோர் இக்குழுவில் உறுப்பினர்களாக இடம்பெற்றுள்ளனர். இன்று நடைபெற்றக் கூட்டத்தில் தமிழக அரசின் தலைமை செயலாளர் திரு. கே.எஸ். ஸ்ரீபதி, சிறு, குறு மற்றும் நடத்தர தொழில்துறை செயலாளர் திரு.பி. செல்வம், கைத்தறித்துறை முதன்மைச் செயலாளர் திரு.இராஜகோபால், ஆதிதிராவிடர் நலத்துறை முதன்மை செயலாளர் திரு.விஸ்வநாத் ஏ. ஷெகாங்கர், தொழில்துறை முதன்மைச் செயலாளர் திரு.ராஜீவ் ரஞ்சன், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை ஆணையர் திரு. ஜீவரத்தினம், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை முதன்மை செயலாளர் திரு. டி.பிரபாகர ராவ், பள்ளி கல்வித்துறை முதன்மை செயலாளர் திரு.குற்றாலிங்கம், தொழில்நுட்பத் துறை செயலாளர் திரு.பி.டபிள்யு.சி. டேவிதார், தொழில் வணிகத்துறை இயக்குநர் திரு.சுந்தரமூர்த்தி, தொழில் கல்வித் துறை இயக்குநர் திரு.எம்.ஆர்.குமார் ஜெயந்த், இந்திய தொழில் கூட்டமைப்பின் தலைவர் திரு.பி. சந்தானம், துணைத் தலைவர் திருமதி.நந்தினி ரங்கசாமி, இந்திய தொழில் கூட்டமைப்பின் முன்னாள் தலைவர் திரு.பிரதிபா மஹாபாத்ரா மற்றும் இணைத் தலைவர் திரு.நாராயண் சேதுராமன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் பங்கேற்றனர்.

* * * * * * * * * * *

வெளியீடு—இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், செ—9.